**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**
**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழில் சிறுகதை முன்னோடிகளாகக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
2. அழகிரிசாமி எந்தெந்தப் பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்?
3. விந்தன் தாமே சொந்தமாக நடத்திய இதழின் பெயர் என்ன?
4. பணத்தின் ஆதிக்கம் பற்றிப் பேசும் கதை ஒன்றின் பெயரினைக் கூறுக.
5. திருமலை நாயக்க மன்னரைப் பற்றி எழுதப்பட்ட வரலாற்றுச் சிறுகதை எது?
6. தன் சிறுகதையில் 'மாப்பிள்ளை' என்று யாரைக் குறிப்பிடுகிறார் சு. சமுத்திரம்?
7. அம்பையின் இயற்பெயர் என்ன?
8. உலகின் முதல் புதினம் எது?
9. தமிழில் சரித்திர நாவலின் தந்தை எனப்படுபவர் யார்?
10. சுஜாதாவின் இயற்பெயர் என்ன?
11. வேங்கையின் மைந்தன் நாவலின் ஆசிரியர் யார்?
12. கி.ராஜநாராயணனின் எந்த நாவலுக்குச் சாகித்ய அகாதெமி பரிசு கிடைத்தது?
13. தீப்பெட்டித் தொழிலில் ஈடுபடும் சிறுமிகளைப் பற்றி எந்த நாவல் குறிப்பிடுகிறது?
14. நாவலாசிரியர் கையாளும் இரு உத்திகளைக் குறிப்பிடுக.
15. அறிவியல் ஆட்சியில் எந்த எந்த விளையாட்டுகள் தடை செய்யப்பட்டன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. ஸ்டீவன்சன் கூறும் மூவகைக் கதைகள் யாவை?
2. மணிக்கொடி இதழ் குறித்து எழுதுக.
3. 'கண்டாமணி' கதையின் சிறப்பு யாது?
4. பிரபஞ்சனின் சிறுகதைப் படைப்புகளைக் கவிதா பதிப்பகத்தார் எவ்வாறு பாராட்டுகின்றனர்?
5. துப்பறியும் புதினங்கள் குறித்து எழுதுக.
6. பொழுதுபோக்கு நாவலில் காணப்படும் கதைக்கரு யாது?
7. ஆனந்தாயி நாவலின் கதைமாந்தர்கள் யாவர்?
8. என் இனிய இயந்திரா என்ற நாவலில் சுஜாதா எவற்றைக் குறிப்பிடுகிறார்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அயல்நாடுகளில் சிறுகதை வளர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அழகிரிசாமியின் படைப்பாக்க உத்தியை ஆராய்க.

2. (அ) அண்ணாவின் வரலாற்றுச் சிறுகதைகள் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

3. (அ) கோபல்லபுரத்து மக்கள் – புதினம் கூறும் வாழ்வியல் முறைகள் யாவை?

(அல்லது)

(ஆ) கானல் – புதினத்தின் பாத்திரங்கள் குறித்து எழுதுக.

*** 